**கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு**

இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தரம் III உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2025

இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தரம் III உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை 2025, மே மாதம் நடைபெறும் என்பதை இத்தால் அறியத்தரப்படுகின்றது.

விண்ணப்பப் படிவம் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் www.doenets.lk எனும் இணையத் தளத்தில் “Our Services” எனும் பகுதியில் “Online Applications- Recruitment Exams/E.B. Exams” எனும் இணைப்பில் பிரசுரிக்கப்பட்டுள்ளது என்பதுடன் விண்ணப்பப் படிவங்களை நிகழ்நிலை (Online) மூலமாக மாத்திரமே சமர்ப்பிக்க முடியும். நிகழ்நிலை மூலமாக விண்ணப்பப் படிவங்களை ஏற்றுக் கொள்ளும் பணிகள் 2025, பெப்புருவரி மாதம் 17ம் திகதியன்று மு.ப 9.00 மணிக்கு ஆரம்பமாகும் என்பதுடன் 2025, மாச்சு மாதம் 14 ம் திகதியன்று பி.ப 9.00 மணிக்கு நிறைவடையும். விண்ணப்பப் படிவத்தை நிகழ்நிலை மூலமாக சமர்ப்பித்த பின்னர் அதனை பதிவிறக்கம் செய்து அச்சுப் பிரதியின் உரிய பகுதியினை கையெழுத்துக்களால் பூரணப்படுத்தி விண்ணப்பதாரரது கையொப்பத்தை உறுதிப்படுத்தி, உரிய நிறுவனத் தலைவரது சான்றுப்படுத்தலுடன் விண்ணப்ப இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் இலங்கை பரீட்சை திணைக்களத்திற்கு கிடைக்கும் வகையில் பதிவுத் தபால் மூலமாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

2. இப் பரீட்சைக்குரிய பாடத் திட்டம் மற்றும் ஏனைய விதிமுறைகள் இலக்கம் 1928/28 மற்றும் 2015.08.21 ஆந் திகதியுடைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்களது வசதி கருதி குறித்த பாடத் திட்டம் மற்றும் ஏனைய விதிமுறைகள் கீழே தரப்பட்டுள்ளன.

3. பரீட்சை தொடர்பான விபரங்கள்

| *வினாத்தாள்* | *காலம்* | *மொத்தப் புள்ளிகள்* | *சித்தியடைவதற்கான புள்ளிகள்* |
|---|---|---|---|
| 01. பொது நிர்வாகம் | காலம் 03 மணித்தியாலங்கள் | 100 | 40 |
| 02. நிதிப் பிரமாணக் குறிப்புக்கள் | காலம் 03 மணித்தியாலங்கள் | 100 | 40 |
| 03. கல்விச் சட்டம், நிர்வாகம் மற்றும் மதிப்பீடு | காலம் 03 மணித்தியாலங்கள் | 100 | 40 |

4. பரீட்சையை நடாத்தும் அதிகாரி : பரீட்சை ஆணையாளர் நாயகம்

5. பரீட்சைக்கான பாடத் திட்டம்

| *வினாப் பத்திரத்தின் பெயர்* | *பாடத் திட்டம்* |
|---|---|
| 01. பொது நிர்வாகம் | (அ) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு மற்றும் அதற்கு முன்னராக இருந்த 1972 மற்றும் 1947ம் ஆண்டு அரசியலமைப்புக்கள்<br>• சிறுவர் உரிமைகள் பிரகடனம்<br>• மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டம்<br>• இலஞ்சம் அல்லது ஊழல் விசாரணைகள் ஆணைக்குழுச் சட்டம்<br>(ஆ) அலுவகத்தின் மற்றும் கள ஒழுங்கமைப்பு முறைகள் மற்றும் தாபன விதிக்கோவையின் பின்வரும் அத்தியாயங்கள் (காலத்திற்கு காலம் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் உட்படலாக) VII, IX, X, XVI, XXV, XXVI, XXVII, XXIX, XXXI, XXXII, XLVII, XLVIII<br>(இ) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்கு விதிகள் கோவை |
| 02. நிதிப் பிரமாணக் குறிப்புக்கள் | (அ) அரச நிதிப் பிரமாணக் குறிப்பு (I ஆம் அத்தியாயம் தவிர்த்து/ காலத்திற்கு காலம் செய்யப்பட்ட திருத்தங்கள் உட்படலாக)<br>(ஆ) தொடர் வருடத்திற்கான வருமானம் மற்றும் செலவு மதிப்பீடுகள். உதா.: அவற்றின் கட்டமைப்பு, வருமானத் தலைப்பு, நிதி மற்றும் பாதீட்டுச் சட்டங்கள்<br>(இ) கல்வி அலுவலகங்களூடாக மேற்கொள்ளப்படும் குறிப்பிட்ட கணக்குசார் செயற்பாடுகளுக்குரிய கட்டளைச் சட்டங்கள் மற்றும் ஏனைய சட்டங்கள் மற்றும் பிரகடனங்கள் |

| *வினாப் பத்திரத்தின் பெயர்* | *பாடத் திட்டம்* |
|---|---|
| 03.கல்விச் சட்டம், நிர்வாகம் மற்றும் மதிப்பீடு | (அ) கல்விக்குரிய சட்டங்கள் மற்றும் விதிமுறைகள்<br>• 1939 ஆம் ஆண்டின் இலக்கம் 31 உடைய கல்விக் கட்டளைச் சட்டம்<br>• 1947 ஆம் ஆண்டின் இலக்கம் 26 உடைய திருத்தச் சட்டம்<br>• 1951 ஆம் ஆண்டின் இலக்கம் 05 உடைய திருத்தச் சட்டம்<br>• 1953 ஆம் ஆண்டின் இலக்கம் 43 உடைய திருத்தச் சட்டம்<br>• அரச பாடசாலைகள் தொடர்பான பிரமாணக் குறிப்பு<br>• 1960 ஆம் ஆண்டின் இலக்கம் 05 உடைய உதவி பெறும் பாடசாலைகள் மற்றும் ஆசிரியர் கல்லூரிகள் (விசேட ஏற்பாடுகள்) திருத்தம் செய்யப்பட்ட சட்டம்<br>• 1961 ஆம் ஆண்டின் இலக்கம் 08 உடைய உதவி பெறும் பாடசாலைகள் மற்றும் ஆசிரியர் கல்லூரிகள் (மேலதிக ஏற்பாடுகள்) சட்டம்<br>• 1973 ஆம் ஆண்டின் இலக்கம் 35 உடைய (பதவிப் பெயர்களில் மாற்றம் செய்தல்) சட்டம்<br>• 1981 ஆம் ஆண்டின் இலக்கம் 65 உடைய உதவி பெறும் பாடசாலைகள் மற்றும் ஆசிரியர் கல்லூரிகள் (விசேட ஏற்பாடுகள்) திருத்தம் செய்யப்பட்ட சட்டம்<br>• 1985 ஆம் ஆண்டின் இலக்கம் 28 உடைய தேசிய கல்வி நிறுவக சட்டம்<br>• 1968 ஆம் ஆண்டின் இலக்கம் 25 உடைய பொதுப் பரீட்சைகள் சட்டம்<br>• 1986 ஆம் ஆண்டின் இலக்கம் 30 உடைய கல்வியியல் கல்லூரிச் சட்டம்<br>• தேசிய கல்வி ஆணைக்குழுவின் அறிக்கை (பரீட்சைக்கு அண்மித்த மூன்று வருடங்களுக்குரிய)<br>• வசதிகள் மற்றும் சேவைகள் கட்டணம்<br>• பழைய மாணவர் சங்கம் மற்றும் பாடசாலை அபிவிருத்தி சங்கங்களுக்குரிய சுற்றுநிருபங்கள் |
| | (ஆ) கல்வி நிர்வாகம்<br>1. (i) கல்வி அமைச்சு<br>(ii) மாகாணக் கல்வித் திணைக்களங்கள் உட்படலாக அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள் மற்றும் கல்வி அமைச்சின் ஒழுங்கமைப்பு மற்றும் பணிகள்<br>(iii) தேசிய மற்றும் மாகாண மட்டத்தில் கல்விசார் திட்டமிடல் மற்றும் பொதுக் குறிக்கோள்களை (பாடசாலை அமைப்பு உட்படலாக) நடைமுறைப்படுத்தல் போன்றன<br>2. பாடசாலை முகாமைத்துவம் மற்றும் பாடசாலை சமூகத் தொடர்புகள்<br>3. கல்வி முகாமைத்துவ தகவல் முறைமை (EMIS)<br>4. விசேட கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள், முறைசாரா கல்விச் செயற் பாடுகள், பாடசாலைமைய முகாமைத்துவம்<br>(இ) மதிப்பீடு<br>• ஆசிரியர்களது செயல்திறன் மதிப்பீட்டுக்காக பயன்படுத்தப்படும் அளவுகோல்கள்<br>• பாடசாலை அடிப்படையிலான மதிப்பீடு<br>• பாடசாலைகளில் சுய மதிப்பீட்டு நிகழ்ச்சித்திட்டங்கள்<br>• வலயக் கல்வி அலுவலகங்கள், மாகாணக் கல்வித் திணைக்களங்கள் மற்றும் கல்வி அமைச்சினூடாக பாடசாலைகளை மேற்பார்வை செய்தல்.<br>• வெளிவாரி குழுக்களால் உள்ளக மதிப்பீடுகளை மேற்பார்வை செய்தல் (கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள கையேடுகள் மற்றும் ஏனைய வெளியீடுகள் தொடர்பில் சிறந்த புரிதலை பெற்றுக் கொள்ளுமாறு பரீட்சார்த்திகளுக்கு ஆலோசனை வழங்கப்படுகின்றது) |

*க.கொ:* மூன்று வினாப் பத்திரங்களும் சிறு வினாக்கள் மற்றும் கட்டமைப்பு முறை வினாக்களைக் கொண்டிருக்கும்.

6. உத்தியோகத்தர் ஒருவர் I ஆவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் உரிய பாடங்களுக்கு ஒரே தடவையில் அல்லது வெவ்வேறு சந்தர்ப்பங்களில் தோற்ற முடியும்.

7. **பரீட்சைக்கான மொழி மூலம் :**

i. இப் பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் நடைபெறும்.
ii. பரீட்சார்த்திகள் விரும்பிய ஒரு மொழியில் மாத்திரமே பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.
iii. பரீட்சார்த்தி அரசாங்க சேவையில் இணைவதற்காக தோற்றிய போட்டிப் பரீட்சையின் மொழி மூலம் அல்லது போட்டிப் பரீட்சையின்றி அரசாங்க சேவையில் இணைந்தவர்கள் தொடர்பில் அரசாங்க சேவையில் நுழைவதற்காக தகுதி பெற்ற மொழி மூலத்தில் விடை எழுதுதல் வேண்டும்.
iv. பரீட்சார்த்தி ஒருவர் தனக்கு உரித்தற்ற மொழி மூலமொன்றில் பரீட்சைக்குத் தோற்றியமை தொடர்பில் வெளிப்படுத்தப்படும் பட்சத்தில் அவரது அபேட்சக உரிமை இரத்துச் செய்யப்படும். பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பிக்கும் மொழி மூலத்தை பின்னராக மாற்றுவதற்கு சந்தர்ப்பமளிக்கப்படமாட்டாது.

8. நிகழ்நிலை (Online) பரீட்சை விண்ணப்பப் படிவம் ஆங்கில மொழியில் மாத்திரமே பூரணப்படுத்தப்படல் வேண்டும். விண்ணப்பதாரர் நிகழ்நிலை மூலமாக விண்ணப்பித்த மென்பிரதி மற்றும் பதிவுத் தபால் மூலமாக அனுப்பி வைக்கப்பட்ட அச்சுப் பிரதி (Printout) ஆகிய இரண்டும் பரீட்சைத் திணைக்களத்திற்கு கிடைக்கப்பெற்ற பின்னர் அம் மென்பிரதி மற்றும் அச்சுப் பிரதியை சரிபார்த்து உறுதி செய்யப்படும் (Verify) என்பதுடன், செல்லுபடியாகும் விண்ணப்பப் படிவம் என்பதாகவும், திணைக்களத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டதாக/ ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்பதாக தாம் முறைமையினுள் பிரவேசிப்பதற்காக பயன்படுத்தப்படும் கையடக்கத் தொலைபேசிக்கு குறுந்தகவல் (SMS) மூலம் அல்லது மின்னஞ்சல் (E-mail) முகவரிக்கு அறியத்தரப்படும். நிகழ்நிலை விண்ணப்பப்படிவத்தை பூரணப்படுத்த முன்னர் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காக தயாரிக்கப்பட்டுள்ள ஆலோசனைப் படிவத்தை (Instructions) பதிவிறக்கம் செய்துகொள்ளவும். விண்ணப்பப்படிவத்தைப் பூரணப்படுத்தும் போது அவ் ஆலோசனைகளை கட்டாயமாக பின்பற்றவும். விண்ணப்பப் படிவத்தின் அச்சுப் பிரதியொன்றைப் பெற்றுக் கொண்ட பின்னர் அதில் செய்யப்படும் எந்தவொரு திருத்தங்களும் செல்லுபடியாகும் திருத்தங்களாக கருத்தில் கொள்ளப்படமாட்டாது. முழுமையாக பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப்படிவங்கள் எந்தவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்ப இறுதித் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

இப் பரீட்சைக்கு விசேட தேவைகளுடன் கூடிய பரீட்சார்த்திகள் தோற்றும் பட்சத்தில் அது தொடர்பில் விண்ணப்பப் படிவத்தில் கட்டாயமாக குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன், உரிய மருத்துவச் சான்றிதழ்களின் பிரதிகளும் விண்ணப்பப்படிவங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

9. போலியான தகவல்களை வழங்குதல்.– விண்ணப்பப்படிவத்தை பூரணப்படுத்தும் போது மேற்படி விடயங்கள் தொடர்பில் சரியான தகவல்கள் வழங்கப்படல் வேண்டும். இப் பரீட்சை சட்ட விதிகளுக்கமைய எவரேனும் ஒரு விண்ணப்பதாரர் தகுதியற்றவர் என வெளிப்படுத்தப்படும் பட்சத்தில் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் வேளையில் அல்லது பரீட்சையின் பின்னர் என எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது பரீட்சார்த்தித் தன்மை உரிமை இரத்துச் செய்யப்படலாம்.

10. விண்ணப்பப்படிவத்தின் அச்சுப் பிரதி 2025, மாச்சு மாதம் 14 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் "பரீட்சை ஆணையாளர் நாயகம், நிறுவனப் பரீட்சை ஒழுங்குபடுத்தல் கிளை, இலங்கை பரீட்சைகள் திணைக்களம், த.பெ. இலக்கம் 1503, கொழும்பு" எனும் முகவரிக்கு கிடைக்கும் வகையில் பதிவுத் தபால் மூலமாக அனுப்பி வைத்தல் வேண்டும். பரீட்சையின் பெயர் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்படல் வேண்டும். அன்றைய தினத்தின் பின்னர் அனுப்பி வைக்கப்படும் விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.

11. இவ் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் மாத்திரம் பரீட்சைக்கு விண்ணப்பித்திருப்பார்கள் எனும் கருதுகோளின்படி விண்ணப்ப முடிவுத் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் பரீட்சைக் கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டும் எனின் அதற்குரிய கட்டணத்தை செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டுடன் சரியாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை அனுப்பி வைத்துள்ள விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சை ஆணையாளரால் பரீட்சை அனுமதி அட்டை அனுப்பி வைக்கப்படும். விண்ணப்பதாரர்களுக்கு அனுமதி அட்டை அனுப்பி வைக்கப்பட்ட உடன் அது தொடர்பில் குறிப்பிடும் அறிவித்தலொன்று இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பிரசுரிக்கப்படும். அவ் அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு 02 அல்லது 03 நாட்களுக்குள் தமக்குரிய அனுமதி அட்டை கிடைக்கப் பெறவில்லை எனின் குறித்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது தொடர்பில் பரீட்சைத் திணைக்களத்தை அறியப்படுத்த வேண்டும். அவ்வாறு அறிவிக்கும் போது விண்ணப்பதாரரின் முழுப் பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் விண்ணப்பித்த பரீட்சையின் பெயரைக் குறிப்பிடல் வேண்டும். கொழும்பிற்கு வெளியில் வசிக்கும் விண்ணப்பதாரர்கள் எனின் அவ் விபரங்களுடன் அனுமதி அட்டையை அனுப்பி வைக்கக்கூடிய தொலைநகல் இலக்கம் ஒன்றுடன் கூடிய கடிதம்

ஒன்றை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தொலை நகல் இலக்கத்திற்கு அனுப்பி வைப்பதன் மூலம் விசாரிப்பது வினைதிறன் மிக்கதாக இருக்கும். பரீட்சைத் திணைக்களத்தில் இது தொடர்பில் விசாரிக்கும் போது விண்ணப்பதாரரின் அபேட்சகர் உரிமையை உறுதிப்படுத்துவதற்காக தன்வசம் உள்ள விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்தியிருப்பின் அதற்கான பற்றுச் சீட்டு மற்றும் விண்ணப்பப்படிவத்தை பதிவுத் தபால் மூலமக அனுப்பி வைத்தமைக்குரிய பற்றுச் சீட்டுக்கள் ஆகியவற்றை தயார் நிலையில் வைத்திருப்பது பிரயோசமானதாக இருக்கும். விண்ணப்பதாரர் ஒருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படுவதனூடாக அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளதாக அங்கீகரிக்கப்பட்டுள்ளதாக கருதப்படலாகாது.

குறிப்பு: மேலே 11 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளைப் பூர்த்தி செய்யத் தவறும் பட்சத்தில் விண்ணப்ப தாரர்களால் பின்னராக முன்னிலைப்படுத்தப்படும் முறைப்பாடுகள் தொடர்பில் கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

12. விண்ணப்பப் படிவத்திலும் பரீட்சைக்கான அனுமதி அட்டையிலும் விண்ணப்பதாரரின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். தமது கையொப்பம் நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரால் சான்றுப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

13. விண்ணப்பதாரர் ஒருவர் தனக்கு விதிக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் உரிய பரீட்சை சுட்டிலக்கத்தின் கீழ் பரீட்சைக்கு தோற்ற வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் அனைத்து விண்ணப்பதாரர்களும் பரீட்சையின் முதல் நாளன்று தமது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையினை மண்டப பிரதானியிடம் கையளிக்க வேண்டும். முறையாக தமது அனுமதி அட்டையை சமர்ப்பிக்காத விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதியளிக்கப்படமாட்டாது.

14. பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றும் அனைத்து பாடங்களின் போதும் தமது சுய அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக பரீட்சை மண்டப பிரதானி திருப்திகொள்ளும் வகையிலான சாட்சிகளை முன்னிலைப்படுத்துவது விண்ணப்பதாரர்களது பொறுப்பாகும். அதற்காக கீழே தரப்பட்டுள்ள ஆவணங்கள் மாத்திரம் செல்லுபடியாகும் :

i. தேசிய அடையாள அட்டை ;
ii. செல்லுபடியாகும் கடவுச் சீட்டு அல்லது ;
iii. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.

அதே போன்று பரீட்சார்த்திகள் தமது அடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய வகையில் முகம் மற்றும் இலத்திரனியல் தொடர்பாடல் உபகரணங்கள் அணியவில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக இரண்டு காதுகளையும் மறைக்காமல் பரீட்சை மண்டபத்தினுள் நுழைய வேண்டும். அவ்வாறாக தமது சுய அடையாளத்தை உறுதிப்படுத்துவதை நிராகரிக்கும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்தினுள் அனுமதிக்கப்படமாட்டார்கள், அத்துடன் பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்த தருணம் முதல் பரீட்சை நிறைவடைந்து வெளியேறும் வரையில் பரீட்சை மண்டப அதிகாரிகளுக்கு விண்ணப்பதாரரை அடையாளங் காணக்கூடிய வகையில் முகம் மற்றும் இரண்டு காதுகளையும் மறைக்காமல் இருத்தல் வேண்டும்.

15. **பரீட்சைக் கட்டணம்**:

(அ) முதல் தடவையாக விண்ணப்பிக்கும் சந்தர்ப்பத்தில் கட்டணம் அறவிடப்படமாட்டாது.
(ஆ) அதன் பின்னர் ஒவ்வொரு தடவையும் மொத்தப் பரீட்சைக்கும் ரூ.1,200.00 உம், ஒரு பாடத்திற்கு ரூ.600.00 வீதமும் கட்டணமாக அறவிடப்படும்.

பரீட்சைக் கட்டணம் செலுத்தும் போது நிகழ்நிலை முறைமையூடாக வழங்கப்படும் கீழ்வரும் கட்டணம் செலுத்தும் முறைகளூடாக மாத்திரமே கட்டணம் செலுத்தப்படல் வேண்டும் :

i. ஏதேனுமொரு வங்கியின் கடன் அட்டை மூலம் (Any Bank Credit Card);
ii. இணையக் கொடுப்பனவு வசதிகளுடன் கூடிய ஏதேனுமொரு வங்கி வைப்பு அட்டை மூலம் (Any Bank Debit Card with the Facility of Internet Transactions);
iii. இலங்கை வங்கியின் நிகழ்நிலை வங்கி முறையூடாக (Online Banking Method of Bank of Ceylon);
iv. ஏதேனுமொரு இலங்கை வங்கிக் கிளையூடாக (Any Branch of the Bank of Ceylon).

குறிப்பு :

(அ) மேற்படி முறைகளூடாக கட்டணம் செலுத்தும் விதம் தொடர்பில் ஆலோசனைகள் இணையத்தளத்தின் பரீட்சைக்குரிய தொழில்நுட்ப ஆலோசனைகளின் கீழ் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

(ஆ) கட்டணம் கிடைக்கப்பெற்றமை தொடர்பில் குறுந்தகவல் (SMS) ஒன்றின் மூலமாக அல்லது மின்னஞ்சல் தகவல் மூலமாக அறியத் தரப்படும். பரீட்சைக் கட்டணமான முழுத் தொகையும் செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன், பரீட்சைக் கட்டணம் குறைவாக அல்லது அதிகமாக செலுத்தப்பட்டிருக்கும் பட்சத்தில் அவ் விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும். மேலே குறிப்பிடப்பட்டுள்ள பணம் செலுத்தும் முறைகள் மூலமாக பரீட்சைக்கான கட்டணத்தை செலுத்தும் போது ஏற்படக்கூடிய கோளாறுகள் தொடர்பில் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் பொறுப்பேற்காது.

(இ) பரீட்சைக்காக செலுத்தப்பட்ட தொகை எந்தவொரு காரணத்திற்காகவும் திருப்பிச் செலுத்தப்படவோ அல்லது வேறு பரீட்சை ஒன்றிற்காக மாற்றம் செய்யப்படவோ மாட்டாது.

16. இப் பரீட்சையை நடாத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட விதிமுறைகளுக்கு பரீட்சார்த்திகள் உட்படுவர். குறித்த சட்ட விதிமுறைகள் மீறப்படும் பட்சத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனை ஒன்றிற்கு அவர்கள் உட்பட நேரிடும்.

17. **பரீட்சை பெறுபேறுகள்**

i. பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்ப்பே இறுதித் தீர்ப்பாகும்.

ii. பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து பரீட்சார்த்திகளதும் பெறுபேறுகள் உள்ளடங்கிய பெறுபேறுகள் ஆவணம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு செயலாளருக்கு வழங்கப்படும்.

18. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் பிரசுரிக்கப்படும் இவ் அறிவித்தலில் மொழிகளுக்கிடையே ஏதேனும் வேறுபாடுகள் அல்லது பொருத்தப்பாடின்மைகள் இருப்பதாக அவதானிக்கப்படும் பட்சத்தில் அத்தகைய சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி மூலமான அறிவித்தலுக்கு அமைவாக நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

19. இவ் அறிவித்தலில் உள்ளடங்காத ஏதேனும் விடயங்கள் இருப்பின் அது தொடர்பில் தீர்மானம் எடுக்கும் உரிமை கல்வி அமைச்சின் செயலாளருக்கு உரித்தாகும்.

நாலக களுவெவ,
செயலாளர்,
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு.

கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு,
இசுருபாய,
பத்தரமுல்ல,
2025, பெப்புருவரி மாதம் 05.

02-87